பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

11 10 2024 **FRIDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) பிரதமர் திரு நரேந்திர மோடி, லாவோஸ் பிரதமர் திரு **Sonexay Siphandone** –ஐ **Vientiane**-ல் சந்தித்து பேச்சு நடத்தினார்.

2) டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை நடைமுறைகளில் கொண்டுவரப்படும் மாற்றங்கள், பாதுகாப்பு அம்சங்களில் எவ்வித சமரசமும் செய்துகொள்ளக்கூடாது என்று ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது

3) நவராத்திரி பண்டிகையின் ஒன்பதாவது நாளான இன்று ஆயுதபூஜை வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

4) தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் சௌராஷ்ட்ரா அணி முதல் இன்னிங்சில் 203 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, லாவோஸ் பிரதமர் திரு **Sonexay Siphandone** –வை **Vientiane**-ல் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இந்த பேச்சுவார்த்தையின்போது, பாதுகாப்பு, புதுப்பித்தக்க எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பின்னர் லாவோஸ் அதிபர் திரு **Sisoulith** –ஐ சந்தித்து பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, கிழக்காசிய உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தியதற்காக பாராட்டு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, **Yagi** புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் இந்தியா வழங்கிய உதவிகளுக்காக அந்நாட்டு அதிபர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

லாவோஸ் ஊட்டச்சத்து பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான திட்டங்களுக்காக ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு நிதியுதவி அளிக்க இந்தியா முடிவு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்தியா – லாவோஸ் இடையே பாதுகாப்பு, இறக்குமதி, ஒலி-ஒளி மற்றும் பாரம்பரிய மாண்புகளை பாதுகாப்பது உள்ளிட்ட ஆறு துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாகியுள்ளன.

<<<<<>>>>>

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை நடைமுறைகளில் கொண்டுவரப்படும் மாற்றங்கள், பாதுகாப்பு அம்சங்களில் எவ்வித சமரசமும் செய்துகொள்ளக்கூடாது என்று ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது

இதுதொடர்பாக, ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், டிஜிட்டல் அடிப்படையிலான பணப்பரிவர்த்தனைகள், மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் உள்ளதா என்பதை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள வங்கிகளுக்கான பரிவர்த்தனை நடைமுறை வழிகாட்டுதல்கள் முறையாக பின்பற்றப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>

கல்வி, செல்வம், வீரம் ஆகியவற்றை குறிக்கும் வகையில் கொண்டாடப்பட்டுவரும் நவராத்திரி பண்டிகையின் ஒன்பதாவது நாளான இன்று ஆயுதபூஜை வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனையொட்டி, கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் மற்றும் அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

வீடுகள், வணிக நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் ஆயுத பூஜையையொட்டி சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் உள்ள சிற்ப கலைக்கூடங்களில் ஆயுத பூஜை வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - சுரேகா – 42 செகண்ட்ஸ்*

தருமபுரி மாவட்டத்தில் கல்வி மற்றும் தொழில்கள் சிறக்க சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுதபூஜை சிறப்பாக கொண்டாடப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - தண்டபாணி – 32 செகண்ட்ஸ்)

சரஸ்வதி பூஜையையொட்டி திருவாரூர் மாவட்டம் கூத்தனூரில் உள்ள ஸ்ரீ மகா சரஸ்வதி கோவிலில் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

நவராத்திரி பண்டிகையின் ஒன்பது நாள் வெற்றியை குறிக்கும் வகையில் பத்தாம் நாளான நாளை விஜயதசமி கொண்டாடப்படுகிறது.

<<<<<>>>>

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1) – 39 செகண்ட்ஸ்)*

தமிழக கடலோர பகுதிகளில் அடுத்த ஐந்து நாட்களுக்கு சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அப்பகுதிகளில் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (2) – 21 செகண்ட்ஸ்)*

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும் நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>

குழந்தை பருவ புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் வகையில், சைக்கிள் பேரணி இன்று மதுரையில் தொடங்கியது.

ராமேஸ்வரம் வரை செல்லும் இந்த சைக்கிள் பேரணியை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, மை பாரத் மற்றும் தன்னார்வ அமைப்புகள் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - ரகுராஜா – 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மாவட்டத்தில் பிரதமரின் கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் வரும் 15ஆம் தேதிக்குள் விண்ணப்பித்து மாணவர்கள் பயன்பெறுமாறு ஆட்சியர் திரு. **Grace Lalrindiki Pachuau** கூறியுள்ளார்.

<<<<<>>>>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை சார்பில் வழங்கப்படும் உதவித்தொகையை பெறுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் குமாரப்பாளையத்தில் காவல்துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது 11 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதுதொடர்பாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<<>>>>

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி – மேட்டுப்பாளையம் சாலையில் அடையாளம் தெரியாத வாகனம் மோதி சிறுத்தை குட்டி உயிரிழந்தது தொடர்பாக வனத்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<<>>>>

ஆயுத பூஜை மற்றும் தொடர் விடுமுறையையொட்டி, சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு வெளிநாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் உள்ளிட்ட ஏராளமானோர் வருகை தந்துள்ளனர்.

<<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் நாளான இன்று சௌராஷ்ட்ரா அணி தனது முதல் இன்னிங்சில் 203 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

கோவையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற சௌராஷ்டிரா அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

<<<<<>>>>

சென்னையில் நடைபெற்று வரும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் சென்னை மாவட்டம் இதுவரை 20 தங்கம், 10 வெள்ளி, 16 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

சேலம் 7 தங்கம் உட்பட 16 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்திலும், ஈரோடு மாவட்டம் 7 தங்கம் உட்பட 17 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

<<<<<***END***>>>>